செய்தி வெளியீடு :107 நாள்–2.2.2011

# செய்தி வெளியீடு

## கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் பணியாற்றிய தினக்கூலி பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமித்து பணி நியமன ஆணைகள் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கினார்

* * * * * *

தமிழ்நாட்டில் உள்ள 15 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும், தகுதியுடைய தற்காலிகப் பணியாளர்களை நிரத்தரப்பணியாளர்களாக பணியமர்த்திட தமிழக அரசு முடிவு செய்து, அதன் அடிப்படையில் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 1971 ஆம் ஆண்டு முதல் 1987 ஆம் ஆண்டு வரை பல்வேறு காலங்களில் தினக்கூலி ஊழியர்களாக நியமிக்கப்பட்டு, தற்போது வரை பணிபுரிந்து வரும் 85 தினக்கூலி தொழிலாளர்களை கடந்த 30 ஆண்டுகளாக எவ்வித பதவி உயர்வும் இன்றி பணியாற்றிவருவதை கருத்தில் கொண்டு, அந்த 85 தொழிலாளர்களையும் நிரந்தரப்பணியாளர்களாக பணியாற்றும் வகையில் பணி நியமன ஆணைகளை துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். மேலும், செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பணிபுரிந்து பணிகாலத்தில் இறந்த இரண்டு பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கும், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பணிபுரிந்து பணிகாலத்தில் இறந்த 6 பணியாளர்களின் வாரிசுகளுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும் துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் புதிய தலைமைச் செயலகத்தில் இன்று (2.2.2011) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், சர்க்கரைத்துறை ஆணையர் (பொறுப்பு) திரு. எம்.மதிவாணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.